# Moral Stories Tamil



# Table of Content


| | |
|---|---|
| 1 | Rat & Frog Story |
| 2 | Fighting Cocks and Eagle |
| 3 | Aesop Fables |
| 4 | Donkey Fox and Lion |
| 5 | The Farmer, His Son and His Donkey |


Instapdf.in

Downloaded from InstaPDF.in

# தவளையும்சுண்டெலியும்-Rat and Frog story

**தவளையும் சுண்டெலியும்-Rat and Frog story :-**ஒரு ஏரிக்கு பக்கத்துல இருக்குற குட்டைல தவளையும் சுண்டெலியும் வாழ்ந்துகிட்டு வந்துச்சுங்க,அதுங்க ரெண்டும் ரொம்ப நல்ல நண்பர்களா இருந்துச்சுங்க



ஒரு கோடை காலத்துல அந்த குட்டைல இருக்குற தண்ணீர் வத்தி போச்சு ,உடனே அந்த சுண்டெலி பக்கத்துல வேற குட்டை இருக்கானு தேடிப்பாத்துச்சு.

கொஞ்ச தூரத்துக்கு அப்பால ஒரு குட்டைய கண்டுபிடிச்சது எலி ,தன்னோட நண்பனான தவளைய கூட்டிகிட்டு அந்த குட்டைக்கு போச்சு அந்த எலி

Downloaded from InstaPDF.in



குட்டைக்கு போன ரெண்டு நண்பர்களுக்கும் திடீர்னு ஒரு சண்ட வந்துச்சு ,யார் இந்த குட்டைக்கு ராஜான்னு ரெண்டுபேருக்கும் போட்டி வந்துச்சு.




இந்த குட்டைய கண்டுபிடிச்சது நான்தான் அதனால நான்தான் இந்த குட்டைக்கு ராஜான்னு சொல்லுச்சு எலி

அதுக்கு தவளை சொல்லுச்சு நீ வேணா இந்த குட்டைய கண்டுபிடிச்சிருக்கலாம் ,ஆனா

Downloaded from InstaPDF.in

குட்டைக்குள்ள வாழுற நான்தான் இதுக்கு இனி ராஜா ,குட்டை பக்கத்துல வாழுற நீ ராஜா கிடையாதுன்னு சொல்லுச்சு தவளை

இத கேட்ட எலிக்கு கோபமா வந்துச்சு அது வேகமா ஓடி போயி தன்னோட இனத்தவர்கள எல்லாம் கூட்டிட்டிக்கு வந்துச்சு



தவளையும் தன்னோட கூட இருக்கவங்கள சண்டைக்கு கூட்டிட்டு வந்துச்சு,தவளைகளும் எலிகளும் கூட்டமா சண்டைபோட ஆரம்பிச்சதுங்க

அதுல நிறைய எலிகளும் நிறய தவளைகளும் செத்துப்போச்சு ,இத மரத்துமேல இருந்து பாத்த பருந்துக்கூட்டம் ,வேகமா வந்து செத்துப்போன எலிகளையும் தவளைகளயும் திங்க ஆரம்பிச்சதுங்க

Downloaded from InstaPDF.in



அடடா எலி கறியும் தவளை கறியும் ரொம்ப நல்லா இருக்கேனு உயிரோட இருக்குற தவளைகளையும் எலிகளையும் பிடிச்சி திங்க ஆரம்பிச்சதுங்க.

கடைசியா எல்லா எலிகளும் ,எல்லா தவளைகளும் காரணமே இல்லாம செத்துப்போச்சுங்க

தேவை இல்லாம சண்ட போட்டு தங்களுக்குள்ள பிரச்னையை அடுத்தருக்கு கொண்டுபோன தவளையும் எலியும் சேந்து செத்துப்போச்சுங்க.

Instapdf.in

Downloaded from InstaPDF.in

# வலியவனுக்கு வலியவன் - திமிர் பிடித்த சேவல் கதை The Fighting Cocks And The Eagle

**The Fighting Cocks And The Eagle வலியவனுக்கு வலியவன் - திமிர் பிடித்த சேவல் கதை:-** ஒரு வீட்டு தோட்டத்துல ரெண்டு சேவல் வாழ்ந்துகிட்டு வந்துச்சு ,அந்த ரெண்டு சேவல்ல ஒன்னு ரொம்ப பலசாலியாவும் இன்னொன்னு பலம் கொறஞ்சத்தவும் இருந்துச்சு ,அதனால அந்த பலசாலியான சேவலுக்கு திமிர் அதிகமா இருந்துச்சு.



Downloaded from InstaPDF.in

அந்த திமிர் பிடிச்ச சேவல் எப்பவும் பலம் கொறஞ்ச சேவலோட சண்ட போட்டுக்கிட்டே இருக்கும் ,எங்க அந்த சேவல் போனாலும் அதுக்கு பின்னாடியே போயி அதுக்கு தொந்தரவு கொடுத்துகிட்டே இருக்கும்

ஒருநாள் பலமில்லாத சேவல் குப்பைல இருக்குற புழு பூச்சிகள சாப்டுகிட்டு இருந்துச்சு ,அப்ப அங்க வந்த திமிர்பிடிச்ச சேவல் அத சாப்பிட விடாம தொந்தரவு செஞ்சுச்சு.



உடனே பலமில்லாத சேவல் வேற இடத்துக்கு உணவு தேட நடந்து போச்சு ,அத பாத்த திமிர்பிடிச்ச சேவல் அந்த பயம் இருக்கணும்னு சொல்லி ஒட்டு மேல ஏறி கூவ ஆரம்பிச்சது

Downloaded from InstaPDF.in



மரத்துமேல இருந்து இத பாத்துகிட்டு இருந்த பருந்து ஒண்ணு ரொம்பநாளா இந்த சேவல்கள சாப்பிடணும்னு காத்துகிட்டு இருந்துச்சு ,ஆனா அந்த வீட்டுக்காரர் வளக்குற நாய்க்கு பயந்து கீழ இறங்காம மரத்துமேலயே இருந்துச்சு அந்த பருந்து



Downloaded from InstaPDF.in

ஆனா இன்னைக்கு ஓட்டுமேல ஏறி கூவுன சேவல பாத்தது ,அடடா இன்னைக்கு நமக்கு அதிர்ஷ்டம் இந்த திமிர் பிடிச்ச சேவல் தன்னோட திமிரினால பாதுகாப்பான இடத்த விட்டுட்டு ஓட்டு மேல நிக்குதுனு சொல்லி பறந்து வந்து அத தூக்கிகிட்டு போய்டுச்சு



அப்பத்தான் **வல்லவனுக்கு வல்லவன் இந்த உலகில் உண்டு**ங்கிற பழமொழி திமிர்பிடிச்ச சேவலுக்கு புரிய ஆரம்பிச்சது ,தனக்கு பலம் இருக்குங்கிற காரணத்துனால பலம் கொறஞ்ச சேவல தொந்தரவு செஞ்சதுக்கு தனக்கு சரியான தண்டனை கெடச்சுடுச்சுன்னு நினச்சு வருத்தப்பட்டுச்சு அந்த திமிர் பிடிச்ச சேவல்

Downloaded from InstaPDF.in

# சிங்கமும் சிலையும் -ஈசாப் நீதி கதைகள்-Aesop Fables in Tamil

**சிங்கமும் சிலையும் -ஈசாப் நீதி கதைகள்-Aesop Fables inTamil:-** ஒரு நாள் ஒரு மனிதனும் சிங்கமும் ஒண்ணா சேந்து பயணம் போய்கிட்டுஇருந்தாங்க.



அப்ப ரெண்டுபேருக்கும் ஒரு தர்க்கம் வந்துச்சு,யார் இந்த உலகத்துலயே பலசாலினி ரெண்டு பேருக்கும் பேச்சு வந்துச்சு.

சிங்கம் சொல்லுச்சு இந்த உலகத்துல மனிதன விட சிங்கம்தான் பலசாலின்னு சொல்லுச்சு

Downloaded from InstaPDF.in



அத மறுத்த மனுஷன் சொன்னான் உலகதவுல சிங்கத்த விட மனுஷன்தான் பெரியவன்னு சொன்னான்

அப்படி பேசிக்கிட்டே வந்தப்ப அங்க ஒரு சிலை இருந்துச்சு ,அந்த சிலை ஒரு சிங்கத்து மேல மனுஷன் நிக்கிற மாதிரி இருந்துச்சு

பாத்தியா மனுஷன் எப்படி சிங்கத்து மேல நிக்கிறான்னு சொன்னான்,

அதுக்கு சிங்கம் சொல்லுச்சு ,இது மனுஷன் செஞ்ச சிலை ,இந்த சிலைய சிங்கம் செஞ்சிருந்தா அது வேறமாதிரி இருக்கும்னு சொல்லுச்சு.

அந்த கருத்த ஒத்துக்கிட்ட மனுஷன் அதோட தன்னோட பேச்ச முடிச்சான்.

Downloaded from InstaPDF.in

# சிங்கம் ,நரி ,கழுதை கதை -donkey fox and lion story moral

**சிங்கம் ,நரி ,கழுதை கதை -donkey fox and lion story moral:-**ஒருகாட்டுல ஒரு சிங்கமும் நரியும் கழுதையும் பக்கத்துக்கு பக்கத்துல வாழ்ந்துகிட்டு வந்ததுங்க



ஒரு நாள் மூணுபேரும் சேர்ந்து கட்டுலுக்குள்ள வேட்டையாட கிளம்புச்சுங்க,அப்ப மூணுபேரும் ஒரு ஒப்பந்தம் போட்டுச்சுங்க ,நரி வேட்டையாட உதவி செய்யும் ,கழுத நல்ல இறையை கண்டுபிடிக்கும் ,சிங்கம் வேட்டையாடும்

Downloaded from InstaPDF.in

இதுமாதிரி மூணு பேரும் சேர்ந்து வேட்டையாடி உணவ சரிசமமா பங்கு போட்டுக்கலாம்னு முடிவு பண்ணுச்சுங்க

அப்பத்தான் அங்க ஒரு கலை மானை கண்டுபிடிச்சது கழுத ,உடனே இத நரிக்கும் சிங்கத்துக்கும் சொல்லுச்சு கழுத



உடனே நரி ஒரு பக்கமா போய் மான் ஓடிபோகம பாத்துக்கிச்சு

உடனே சிங்கம் வேகமா அந்த மான் மேல பாஞ்சு அத வேட்டையாடுச்சு



Instapdf

Downloaded from InstaPDF.in

சிங்கம் சொல்லுச்சு கழுதையரே உணவ மூணு பேருக்கும் பங்கு பிரிங்கன்னு.உடனே கழுத மூனுபேருக்கும் சமமா உணவ பங்கு பிரிச்சது.



இத பாத்த சிங்கத்துக்கு கோபம் வந்துச்சு ,அதுஎப்படி வீரனான எனக்கும் சமமா உணவு கொடுப்பன்னு சொல்லி ஒரே ஆடிய அடிச்சி கழுதைய கொன்னுடுச்சு



Downloaded from InstaPDF.in

அடுத்ததா நரிகிட்ட உணவ பிரிக்க சொல்லுச்சு ,உடனே நரி தனக்கு கொஞ்சமா உணவும் ,சிங்கத்துக்கு அதிகமா உணவும் எடுத்து வச்சது



அடடா எப்படி நரியாரே இவ்வளவு பெருந்தன்மையா உணவ பிரிச்சீங்கன்னு கேட்டது ,அதுக்கு நரி கழுதைய காமிச்சது.

Instapdf.in

Downloaded from InstaPDF.in

# The Farmer, His Son And His Donkey -விவசாயியின் கழுதை

**The Farmer, His Son And His Donkey -விவசாயியின் கழுதை**:-ஒரு ஊர்ல ஒரு விவசாயி இருந்தாரு ,அவருக்கு திடீர்னு பணக்கஷ்டம் வந்துச்சு ,உடனே தன்னோட கழுதையை வித்து அந்த பணத்தை வச்சு பிரச்னையை சமாளிக்கலாம்னு முடிவு பண்ணுனாரு.



தன்னோட மகன கூட்டிகிட்டு பக்கத்துக்கு சந்தைக்கு நடந்து போனாரு அந்த விவசாயி ,அப்படி போகும்போது ஒருத்தர் அவுங்கல பாத்து சொன்னாரு ,கழுதை சும்மாதான நடத்துவது ,உங்க ரெண்டு பேருல யாராவது அதுமேல உக்காந்துட்டு போகலாம்லனு சொன்னாரு

Downloaded from InstaPDF.in



உடனே தன்னோட மகன அந்த கழுத மேல ஏத்தி விட்டுட்டு கூட சேர்ந்து நடந்தார் விவசாயி



கொஞ்ச தூரத்துக்கு அப்புறமா அங்க வந்த இன்னொருத்தரு ,அட பாவி சின்ன பயலே வயசான உங்க அப்பாவ நடக்க விட்டுட்டு நீ உக்காந்துகிட்டு வரியேனு கேட்டாரு

Downloaded from InstaPDF.in



உடனே விவசாயி சரினு தான் உக்காந்துக்கிட்டு அவரோட மகன கூட நடக்க சொன்னாரு ,



கொஞ்ச தூரம் போனதுக்கு அப்புறம் ,ஒரு பாட்டி வந்து நீ எல்லாம் பெரிய மனுசனா,சின்ன பையன நடக்க விட்டு நீ உக்காந்துட்டு வரியேனு சொன்னாங்க .

Downloaded from InstaPDF.in



உடனே தன்னோட மகனையும் கூட ஏத்திக்கிட்டு ஒண்ணா பயணம் செஞ்சாரு அவரு ,



அப்ப அந்த வந்த முதியவர் ஒருவர் அட கொடுமைக்காரர்களா இப்படி ரெண்டு பேரு அந்த குதிரைமேல உக்காந்து இருக்கீங்களே உங்களுக்கு இரக்கம் இல்லையானு கேட்டாரு

உடனே ரெண்டு பேரும் கீழ இறங்கிக்கிட்டு ,இனி என்ன பண்றதுன்னு யோசிச்சாங்க ,இனி இந்த கழுதைய நாம தூக்கிட்டு நடப்போம்னு ,ஒரு

Downloaded from InstaPDF.in

குச்சியை கழுதையோட கால்களுக்கு நடுவுல கட்டி தலைகீழா தூக்கிட்டு நடந்தாங்க ,



அப்ப அங்க ஒரு ஆறு குறிக்கிட்டுச்சு ,ஆத்த கடக்கறப்ப கழுத்த பயத்துல துள்ளி குதிச்சது ,உடனே பிடிய விட்டான் அந்த பையன் ,அப்ப அந்த கழுத்த ஆத்தோட போயிருச்சு

அடுத்தவங்க சொல்றத எல்லாத்தையும் கேட்ட அவங்களுக்கு ,கழுதையும் போயிருச்சு ,அத வித்து பணம் கிடைக்க வழியும் இல்லாம போயிருச்சு

நீதி :- சொல் புத்தியை விட சுய புத்தியே சிறந்தது

Downloaded from InstaPDF.in